


எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பணியாற்றிட வேண்டிய நெறிமுறைகளை வகுத்திடும் ”தி.மு.க. சொற்பொழிவாளர்கள் கூட்டம் நேற்று (12–03–2024) சென்னை, தியாகராயநகர், ஜி.என்.செட்டி சாலையில் உள்ள ”ஓட்டல் அகார்டில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் மாநிலங்களவைக்குழுத் தலைவர் திருச்சி சிவா, எம்.பி., தலைமையில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., வரவேற்புரையாற்றிட நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்புக்குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர்கள் திண்டுக்கல் ஐ.லியோனி, முனைவர் சபாபதிமோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். – சிறப்பு அழைப்பாளராக மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக கொள்கைப் பரப்பு இணை – துணைச் செயலாளர்கள் மற்றும் கழக சொற்பொழிவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் தரும் ‘மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை’ இகழ்ந்து பேசும்

# நடிகை குஷ்புவுக்கு - தமிழ்நாட்டுப் பெண்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## அமைச்சர் கீதா ஜீவன் கடும் கண்டனம்!

சென்னை, மார்ச் 13-

“பா.ஜ.க.,வின் நடிகை குஷ்பு அவர்களே! அடக்கி வாசியுங்கள்! தமிழ்நாட்டுப் பெண்கள் உங்களுக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள்!” என அமைச்சர் திருமதி, கீதா ஜீவன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களை இழிவுபடுத்திய நடிகை குஷ்புவுக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான திருமதி, கீதா ஜீவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

நடிகை குஷ்பு, முதலமைச்சர் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைப் பற்றி மிக இழிவாகப் பேசியிருக்கிறார். குறிப்பாகத் தமிழ்நாடு அரசு பெண்களுக்கு வழங்கும் தொகையைப் பிச்சை போடுவதாக இழிவுபடுத்தியுள்ளார். உரிமைத்தொகையைப் பெறுகின்ற அந்த ஒரு கோடியே



16 லட்சம் பெண்களையும் இழிவுபடுத்தி நடிகை குஷ்பு பேசியிருப்பது மிகவும் வருத்தத்தைத் தருகிறது.

பெண்களுடைய வாழ்க்கை நிலையை அறியாதவர் அவர் என்பதை நாம் இதன் மூலம் அறிய முடிகிறது. அவருக்கு என்ன தெரியும்?

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள் நடுத்தர வாழ்க்கை முறை என்னவென்று தெரியுமா? அந்த ஆயிரம் ரூபாய் எவ்வளவு பயன் தருகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? ஒன்றுமே தெரியாமல் வீட்டில் இருந்து வெளியே வந்து மைக்கைப் பார்த்துப் பேசுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த மாதிரி பேசக்கூடாது. நிலை அறியாமல் நீங்கள் பேசுகிறீர்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், உங்களுக்குத் தெரியாது. மாதம் ஆயிரம் ரூபாய் என்பது உங்களுக்கு அப்படித்தான் தெரியும். நீங்கள் கோடியில் புரள்பவர். பணவசதி படைத்தவர். நீங்கள் பெரிய நடிகர். உங்களுக்கு அந்த ஆயிரம் ரூபாய் அப்படித்தான் தெரியும். ஆனால் இந்த மாதிரி ஆயிரம் ரூபாய் வைத்துக் குடும்பம் நடத்துகிற, வாழ்வாதாரத்துக்காக, ஒரு மருத்துவச் செலவுக்காக, பிள்ளைகளின் படிப்புக்காக எத்தனையோ பேருக்குப் பலன் தருகிறது.

அதனைச் சிலர் “முதலமைச்சர் எனக்குத் தரும் சீர்” என்று சொல்கிறார்கள். சில தாய்மார்கள், “என் பிள்ளைகள் என்னைப் பார்த்துக் கொள்ளாவிட்டாலும், மவராசன் முதலமைச்சர் எனக்கு ஆயிரம் ரூபாய் தந்து என்னைப் பார்த்துக்கொள்கிறார்” எனச் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு வாழ்வாதாரத்துக்கு உதவக்கூடிய உரிமைத்தொகையை நீங்கள் அசால்டா “பிச்சை போடுகிறார்” என்ற வார்த்தையைச் சொல்கிறீர்கள். பிச்சை என்பதன் அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? நீங்கள் உங்கள் போக்குக்கு வார்த்தைகளை இப்படி எல்லாம் பயன்படுத்தாதீர்கள்.

நிச்சயமாக இதற்கு எங்களுடைய தமிழ்நாட்டுப் பெண்கள் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களும் உங்களுக்கு சரியான பாடம் புகட்டுவார்கள். அவர்கள் உங்களைப் பார்த்துக் கொள்வார்கள். அடக்கி வாசியுங்கள் என்பதை மட்டும் நான் கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்புரை!

# தாம்பரம் மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் பொதுக்கூட்டம்!

## மு.தேவபாலாஜி தலைமை! எஸ்.ஆர்.ராஜா - இ.கருணாநிதி பங்கேற்பு!

சென்னை, மார்ச் 13 -

தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட ஐந்தாவது மண்டலத்தில் இன்று (13-3-2024 புதன்கிழமை) மாலை 5:00 மணியாளவில் மாணிக்கம் நகர் நூத்தஞ்சேரியில் மாடம்பாக்கத்தில் தாம்பரம் மாநகர திமுக ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் தமிழக முதல்வர் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா பொது கூட்டம் நடைபெற்ற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நல குழு துணை அமைப்பாளர் மு தேவ பாலாஜி தலைமை தாங்குகிறார். தாம்பரம் கிழக்கு பகுதி செயலாளர் ஆ நடராஜன் எம் சி, வரவேற்கிறார். கோ. தேணுபுரி, தி ச நடராஜன், மங்களபுரம் எம் பாபு, சா ரவிசந்திரன், மு சரவணன், சி கார்த்திக் அகியோரின் முன்னிலை வகிக்கின்றனர்.

நல திட்ட உதவிகள் வழங்கும் விழா பொது கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி. ஆர்.பாலு. எம் பி அவர்கள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா மோ அன்பரசன். மாநகர கழக செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.ராஜா , பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ கருணநிதி, தலைமை கழக பேச்சாளர் நெல்லிக்குப்பம் எஸ்.புகழேந்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் என்.மருது கணேஷ். தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ காமராஜ்,.மண்டல குழு தலைவர்கள். எஸ். இந்திரன்.டி. காமராஜ். தாம்பரம் கிழக்கு பகுதி செயலாளர்.ஆ. நடராஜன்.. மு வேல்முருகன் வார்டு செயலாளர்கள் எம் கே மோகனரங்கன் மாமன்ற உறுப்பினர் எஸ் ரமாதேவி, தலைமை கழக பேச்சாளர் பகுதி கழக துணை செயலாளர் கி. வேலுமணி ,ஜி.கருணாகரன் மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் இரா. செல்வகுமார், தாம்பரம் கிழக்கு பகுதி நிர்வாகிகள்.வி ஜெயராமன்.டி. ராஜாராம்.எஸ். விமலா. எம். சாம்சங். ஆர்.பன்னீர் செல்வம் ஜெ.செல்வம். நாகராஜன். டி.வி.கோதண்டனம். மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள். பி.கன்னியம்மாள். மெக்கானிக்.எஸ். சண்முகம்.பி. ரமேஷ்.ஜே. பிராங்கிளின். ஜி. தேன்மொழி.எஸ்.பிரபாகரன்.டி. இளங்கோவன் . சா. மணிவண்ணன். சி. சுந்தர்பாபு. எம். ரகு.எ.சங்கர்.ஆர். புருஷோத்தமன். எஸ்.தீபன்குமார். பி.ஜெகன்.செயற்குழு உறுப்பினர்கள். கே. எஸ். எம்.சரவணன். கோ.சுதாகர்.பி.எம். பாலகிருஷ்ணன். எஸ். செந்தில். கே. அப்பன்,எல்.சதீஷ்குமார். எம். அசோக்.எல்.வி.ஆர் ரஞ்சித். கொ.ஶ்ரீதர், தீனா,கழக முன்னோடிகள். எஸ்.முரளிதரன்.எம். மல்லிகாமோகன், டி.பிரான்சிஸ் ஜெயராமன்,எஸ். பட்டேல், ஜி. லோகநாதன்,.பி. பத்மநாபன்,.பி. லட்சுமிபதி,.கோ. ரங்கன்,.கே. ரமேஷ்,.பி. மணி,. பி.காமராஜ்,.டி. முருகேசன்,.டி. ராஜேந்திரன்,. டி. எம்.குமார்,.வி. நாகராஜ்,. ஏயோவாஸ்,.என். அஜீத் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

தி. முருகன்.மற்றும் கழக நிர்வாகிகளும் மாணவர் அணிகள் இளைஞர் அணிகள் மகளிர் அணிகள் வட்ட செயலாளர்கள் வட்டப் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் 50 ஆண்டுகால பொது மக்களின் கோரிக்கையை ஏற்று அஸ்தினாபுரத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ரூபாய் 60 லட்சம் மதிப்பீட்டில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் தலைவரும் பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.,பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர்கள் மகாலட்சுமி, கருணாகரன், சரண்யா, மதுரை வீரன், சரஸ்வதி, சந்திரசேகர், விஜய், சங்கீதா, வியாபார பெருங்குடி மக்கள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### மதுராந்தகம் அருகே சாலை விபத்து

# உயிரிழந்த மாணவர்கள் குடும்பத்திற்கு நிதியுதவி - ஆறுதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 13–

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகேசிறுநாகலூர்கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து அறிவிப்பு வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிறுநாகலூர் கிராமம், சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று (12.3.2024) காலை தொழுப்பேடுவிலிருந்து செங்கல்பட்டு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து முன்னால் சென்ற கண்டெய்னர் லாரியை முந்திச்செல்ல முயன்றபோது எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில், பேருந்தில் பயணம் செய்த மதுராந்தகம் தனியார் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்கள் தனுஷ் (வயது 21), த/பெ. முனியப்பன், கமலேஷ் (வயது 19), த/பெ. முருகேசன் மற்றும் மோனிஷ் (வயது 19), த/பெ.சிவகுமார் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் ரவிச்சந்திரன் (வயது 20), த/பெ.குணசேகரன் என்பவர் மதுராந்தகம் அரசுப் பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த நான்கு மாணவர்களின் பெற்றோர்களுக்கும், அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறன். ஈடுசெய்ய முடியாத இந்தப் பேரிழப்பு நம் அனைவருக்கும் ஆழ்ந்த வேதனை அளிக்கிறது. உயிரிழந்த மாணவர்களின் பெற்றோருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் 50 ஆண்டுகால பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று

# ரூ. 81 லட்சத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் - பேருந்து நிறுத்தம் - நிழற்குடைகள்!

## பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் !

சென்னை, மார்ச் 13

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் குரோம்பேட்டை அஸ்தினாபுரம் சுமார் 5 லட்சத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் வசிக்கின்றனர். இங்கு அஸ்தினாபுரத்தில் திறந்த வெளி பேருந்து நிலையம் இயங்கி வந்தன. இங்கிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் பிராட்வே, தி.நகர், திருவான்மியூர் உட்பட்ட இடங்களுக்கு மாநகரப் பேருந்துகள் தினசரி பல்வேறு பேருந்துகள் இயக்கப்பட்டன.

சுமார் 30 ஆயிரத்துக்கு பேர் மேற்பட்ட பயணிகள் இங்கிருந்து தினசரி பல்வேறு பகுதிகளுக்கு சென்று வந்து கொண்டிருந்தார்கள்.

திறந்த வெளி பேருந்து நிறுத்தத்தில் இருந்து பயணிகள் தினசரி பேருந்தில் செல்வதற்கு மிகவும் சிரமத்திற்கு உள்ளானார்கள். 50 ஆண்டுகளுக்கு மேலாக பிரச்சினை நீடித்து வந்தன.

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி இடம் பொதுமக்கள் வியாபார சங்க நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர்.

இதற்காக நகர மன்ற தலைவராக இருந்த காலத்தில் இருந்து முயற்சிகள் மேற்கொண்ட சட்டமன்ற உறுப்பினர் அப்பொழுது இந்த இடம் ஒரு தனி நபர் ஆக்கிரமிப்பு செய்திருந்த காரணத்தினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தும் அதற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன் சட்டமன்றத்தில் பல்வேறு முறை வலியுறுத்தி கோரிக்கைகள் வைத்தும் மிகப்பெரிய போராட்டத்திற்கு பிறகு நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு கொள்கையான எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் ஆணைக்கிணங்க பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 60 லட்சம் ஒதுக்கி மிகப் புதிய பிரமாண்டமான பேருந்து நிலையத்தை அமைத்து அதற்கு கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் என பெயர் சூட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

அப்பொழுது அங்கு இருந்த பொதுமக்கள் வியாபாரக் பெருங்குடி மக்கள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் 50 ஆண்டு காலமாக மிகவும் சிரமத்துக்குள்ளான எங்கள் பிரச்சினைக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி அமைந்த உடன் சட்டமன்ற உறுப்பினர் இந்த பேருந்து நிலையம் அமைய வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளையும் எடுத்து 50 ஆண்டுகால இப்பகுதி மக்களின் கனவை நிறைவேற்றும் வகையில் மிக பிரம்மாண்டமான சிறப்பான ஒரு பேருந்து நிலையத்தை அமைத்துத் தந்து பொதுமக்கள் பயன்பாட்டில் கொண்டு வந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறோம் என்று தெரிவித்தார்கள்.

இதைத்தொடர்ந்து குரோம்பேட்டையில் இருந்து அஸ்தினாபுரம் பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் வரும் சாலையான ராஜேந்திர பிரசாத் சாலையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 21 லட்சம் மதிப்பீட்டில் மூன்று இடங்களில் பேருந்து நிறுத்த நிழற்குடைகள் அமைக்கப்பட்டு அதையும் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், இ. எஸ்.பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர்கள் மகாலட்சுமி கருணாகரன், சரண்யா மதுரை வீரன், சரஸ்வதி சந்திரசேகர், சங்கீதா விஜய், மாநகர போக்குவரத்து மண்டல மேலாளர் தாமஸ், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி அதிகாரிகள், வியாபார சங்க நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.




கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மற்றும் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் கே.அரிகிருஷ்ணன் தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பி.கே.நாகராஜ் வரவேற்புரையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் வி.ராஜசேகர், கே.செங்குட்டுவன், மெய்யழகன், ஜெகதாம்பாள், சி.ஆர்.குமரன், கொப்பூர் டி.திலீப்குமார், சி.ரவிக்குமார், ஆர்.மோகனசுந்தரம், திருவேணி நாகராஜ் ஆகியோர் முன்னிலையில், கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி மேலும் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு கால சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்.நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் கே.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன், ஒன்றிய கழக செயலாளர்கள் கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், கழக பேச்சாளர் மண்புகழ் மனோகரன், வி.எஸ்.நேதாஜி, களாம் பாக்கம் எம்.பன்னீர்செல்வம், எஸ்.பாலசுப்பிரமணி, கே.ஏ.மதியழகன், கே.பி.தமிழ்ச்செல்வன், ஆர்.ராஜேந்திரகுமார், எம்.சேகர், ஏ.பெருமாள், ஏ.எஸ்.மணி, ஆர்.வாசு, பிரகாஷ்ஞானஒளி, ஆர்.ரமணன், எம்.முத்தமிழ ரசன், எம்.கார்த்திக், பி.ஜானகிராமன், எம்.முரளி, ஆர்.ராஜலிங்கம், பி.பாபு, கே.பாலாஜி, எஸ்.சண்முக ஆனந்தன், எஸ். லோகிதாசன் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை வடக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வு கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.அறிவிப்பு



சென்னை வடக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வு கூட்டம் என்னுடைய தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், தொகுதி பொறுப்பாளர்கள் வழக்கறிஞர் ஏ.சரவணன், என்.நவீன், நந்தனம் நம்பிராஜன் ஆகியோர் முன்னிலையில் எண்.1,முதல் பிரதான சாலை, சர்மா நகர் (எனது அலுவலகம்) விலாசத்தில் கீழ்கண்ட தேதிகளில் கீழ்கண்ட அணிகளின் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவர்களுக்கான தேதிகளில் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து

குறிப்பு : கூட்டத்திற்கு வருகை தரும் போது மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் மினிட் புத்தகம் கொண்டு வரவும்.

| | |
|---|---|
| **14.03.2024 வியாழக்கிழமை** | |
| **காலை 9.30 மணி**<br>மாணவர் அணி<br>மகளிர் அணி<br>விளையாட்டு மேம்பாட்டு அணி | **காலை 10.30 மணி**<br>மகளிர் தொண்டர் அணி<br>மருத்துவ அணி<br>சுற்றுச் சூழல் அணி |
| **14.03.2024 வியாழக்கிழமை** | |
| **மாலை4.30 மணி**<br>அயலக அணி<br>தொழிலாளர் அணி | **மாலை 5.30 மணி**<br>தகவல் தொழில்நுட்ப அணி<br>வர்த்தகர் அணி |
| **15.03.2024 வெள்ளிக்கிழமை** | |
| **காலை 9.30 மணி**<br>நெசவாளர் அணி<br>இலக்கிய அணி<br>அமைப்புசாரா ஓட்டுநர் அணி | **காலை 10.30 மணி**<br>பொறியாளர் அணி<br>வழக்கறிஞர் அணி<br>சிறுபான்மையினர்நல உரிமைப்பிரிவு |
| **15.03.2024 வெள்ளிக்கிழமை** | |
| **மாலை 4.30 மணி**<br>கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை<br>தொண்டர் அணி | **மாலை5.30 மணி**<br>ஆதிதிராவிடர் நலக்குழு<br>மீனவர் அணி |

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
மாவட்ட பொறுப்பாளர் –
சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.